# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 13768/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www. tneo.gov.in


## முன்னிலை: ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்

## மேல் முறையீட்டு மனு எண். 49 / 2012

திரு. என். பாலகிருஷ்ணன்,
எண். 2, கலிங்க ரோடு,
மகேந்திரபுரி,
சேலம் – 636 008. . . . .மேல்முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
சேலம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
கே.என். காலனி, உடையப்பட்டி
சேலம் - 636 014 . . . . . . எதிர்மனுதாரர்

## ஆணை நாள் : 31–12–.2012

1.0 திரு. என். பாலகிருஷ்ணன், மகேந்திரபுரி, சேலம்–8 அவர்களுடைய 16.11.2012 நாளிட்ட மனுமேல் முறையீட்டு மனு எண் 49/2012 ஆக பதிவு செய்யப்பட்டது.

2.0 மேல்முறையீட்டாளர், தன்னுடைய மனுவில் அவரது வீட்டில் உள்ள மும்முனை மின் அளவி பழுதடைந்து விட்டதால் 6.6.2012 அன்று புதிய மின் அளவி மாற்றப்பட்டதாகவும், மின்னளவி மாற்றிய பின்பு அவருடைய மின் கட்டணம் 3 ½ மடங்கிலிருந்து 4 மடங்குவரை அதிகமாக உள்ளது என்று தெரிவித்து நல்ல தரமான மின்னளவி பொறுத்த வேண்டும் என்று வேண்டியுள்ளார்.

3.0 மேலும் மேல் முறையீட்டாளர், தற்பொழுது அவருடைய மின் இணைப்பிலுள்ள மின்னளவியானது மெயின் ஆப் செய்தாலும் ஓடுவதாகவும் தெரிவித்துள்ளார். மின்னளவி மாற்றுவதற்கு முன் அவரின் சராசரி உபயோகம் 80–110 யூனிட் என்றும் ஆனால் மின்னளவி மாற்றிய பின்பு மின்பயன்பாடு 279 யூனிட், 300 யூனிட், 250 யூனிட்

என்றும் 7/12 , 9/12 மற்றும் 11/2012 மாதங்களில் பதிவு ஆகியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அவருடைய மே மாத மின் கட்டணம் ரூ.161/– ஆக இருந்தது என்றும் ஆனால் அதுவே 7/12ல் ரூ. 667 ஆகவும், 9/12ல் ரூ.730/– ஆகவும் 11/12ல் ரூ.580/– ஆகவும் உயர்ந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

5.0 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வீட்டில் பிரிஜ், வாஷிங்மெஷின், கம்யூட்டர், வாட்டர் ப்யூரிபையர் மற்றும் மின்சார அடுப்பு ஆகிய மின்சாதனங்கள் இல்லை என்ற தகவலையும் தெரிவித்துள்ளார்.

6.0 மேற்கண்ட மேல் முறையீட்டாளரின் மனுவின் மீது சேலம் மின்பகிர்மானவட்டத்தின் குறை தீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 10.10.12 அன்று கீழ்கண்டவாறு வழங்கியுள்ளது.

*“அதன்படி மின் இணைப்பு எண் **429–014–63(1A)** ஐ ஆய்வு செய்ததில் தங்களுக்கு பொருத்தப்பட்ட மின்னளவி நல்ல நிலையில் இயங்கிக் கொண்டுள்ளது. மேலும் தங்களின் வீட்டில் மின்சாரம் மூலம் உபயோகப்படுத்தப்பட்டு வரும் மின்சாதனங்களை பார்க்கும் பொழுது ஒரு நாளைக்கு சுமார் 7 யூனிட்டுகள் வரை மேற்படி மின் இணைப்பில் உபயோகப்படுத்த வாய்ப்புள்ளது என்றும் அறியப்பட்டுள்ளது. எனவே தங்களுக்கு விதிக்கப்பட்ட மின் கட்டணத்தொகை சரியே என்றும் வேறு மின் அளவி பொறுத்த தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.”*

6.0 மேல் முறையீட்டாளர் மேற்கண்ட சேலம் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வு தனக்கு திருப்தி தரவில்லை என்று மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்துள்ளார்.

7.0 மேற்கண்ட மேல் முறையீட்டு மனுவின் நகல் சேலம் மின்பகிர்மான வட்டத்தின் மேற்பார்வை பொறியாளருக்கு அனுப்பப்பட்டு மேல்முறையீட்டாளருடன் உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை என்றால் அவரின் எதிர் உரையை சமர்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், இருதரப்பினரும் தங்களுடைய வாதங்களை நேரில் எடுத்துரைக்க வசதியாக 26.12.2012 அன்று கேட்புரை மின் குறைதீர்ப்பாளரின் முன்பு நடத்தப்படும் என்ற தகவலும், இருதரப்பினருக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

8.0 மேற்பார்வை பொறியாளர், சேலம் மின் பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய 20.12.2012 கடிதத்தில் 19.12.2012 அன்று மேல் முறையீட்டாளருடன் பேச்சு வார்த்தை, மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்டதாகவும், அதில்

மின்நுகர்வோர் தனக்கு புதியதாக வேறொரு மின்னளவியை பொருத்துமாறும் அதில் அறியப்படும் மின் பயன்பாட்டு அளவினை ஏற்றுக் கொண்டு, தான் அதற்கான தொகையை செலுத்த தயாராக உள்ளதாகவும், மேலும் மேற்படி மின்னளவியை மாற்றி வைப்பதற்கான மதிப்பீட்டு தொகையை தான் செலுத்த தயாராக உள்ளதாகவும் தெரிவித்து அவ்வாறு செய்யும் பட்சத்தில் அவர் உடன்பாட்டுக்கு ஒத்து கொள்வதாகவும், தமிழ்நாடு மின் குறைதீர்பாளரிடம் சமர்பித்துள்ள மனுவிற்கு அதையே தீர்வாகவும் எடுத்துக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளதாக அறிவித்து அதற்கு ஆதாரமாக 19.12..2012 அன்று சேலம் மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் நடந்த பேச்சு வார்த்தையின் அசல் நகலையும் இணைத்துள்ளார்.

**9.0** மேல் முறையீட்டாளர் திரு.என். பாலகிருஷ்ணன், மகேந்திரபுரி, சேலம் அவர்கள் தன்னுடைய 22.12.2012 நாளிட்ட கழகத்தில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

*"எனக்குச் சொந்தமான மி.இ.எண். 429–014–63–ல் உள்ள மின் அளவி கூடுதலாக மின்சார பயனீடு பதிவு செய்வதாக கூறி அதனை மாற்றக்கோரி சம்பந்தப்பட்ட மின்அலுவலகத்தில் புகார் செய்தபோது அவர்கள் மின்அளவி சரியாக இயங்குவதாக கூறி அதை மாற்றம் செய்யவில்லை. எனவே நான் மின்குறைதீர் மன்றத்தில் முறையிட்டேன். அங்கும் அதே பதிலே எனக்கு தரப்பட்டது. எனவே நான் பார்வையில் கண்ட எனது கடிதம் வாயிலாக தங்களிடம் மேல்முறையீடு செய்தேன். அதன்பின்னர் எனது மின்இணைப்பிலுள்ள மின்னளவியை 22.12.12 அன்று மின்வாரியத்தினர் மாற்றிவிட்டு புதிய மின்னளவியை வைத்துள்ளனர். எனவே புகாருக்கு தீர்வு கிடைத்துவிட்டதால் நான் பார்வையில் கண்ட கடிதம் வாயிலாக தங்களிடம் கொடுத்த எனது மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக்கொள்கிறேன்."*

**10.0** மேற்கண்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளார் தன்னுடைய புகாருக்கு தீர்வு கிடைத்துவிட்டதால், தன்னுடைய மேல் முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளதால், மேற்கூறிய மேல்முறையீட்டு மனு எண். 49/2012, தள்ளுபடி செய்யப்படுகிறது என்று மின்குறைதீர்ப்பாளரால் தீர்வு செய்யப்படுகிறது.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
**1)** திரு. என். பாலகிருஷ்ணன்,
எண். 2, கலிங்க ரோடு,
மகேந்திரபுரி,
சேலம் **– 636 008.**

2. மேற்பார்வை பொறியாளர்,
சேலம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
கே.என். காலனி, உடையப்பட்டி
சேலம் **- 636 014.**

3. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை
சென்னை – 600 002.

4. செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.

5. உதவி இயக்குநர் (கணிணி) – **இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.